(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.73/2014 |
| Deposition Of Witness for | : | PW12 |
| Name | : | **Thiru.Muralitharan** |
| Father's Name | : | Thiru.Danasekaran |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **15th October 2025.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u> :

நான் தற்போது சிவகங்கை மாவட்டம், கீழக்கரிசல்குளத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஆவணம் ஏற்கனவே

அ.த.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்த பத்திரத்தில் நானும் எனது மனைவியும் 2011 ம் ஆண்டு கையொப்பம் செய்துள்ளோம். அந்த இடம் சிவகங்கை மாவட்டம், கீழக்கரிசல்குளம், பொட்டப்பாளையம் பஞ்சாயத்தில் அமைந்துள்ளது. அந்த இடத்தின் விஸ்தீரணம் 3 ஏக்கர் 9 சென்ட் ஆகும். அதில் 2 ஏக்கர் நிலத்தினை முருகசாமி என்ற நபருக்கு சாய தொழிற்சாலை அமைப்பதற்காக வாடகைக்கு கொடுத்திருந்தேன். மேற்படி ஒப்பந்தத்தின்படி 10 ஆண்டுகளுக்கு வாடகை ஒப்பந்தப்பம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் முருகசாமி என்பவர் 2013–ம் ஆண்டே நிலத்தினை காலி செய்து இடத்தினை கொடுத்துவிட்டார். அந்த **வாடகை ஒப்பந்தபத்திரம் அ.த.சா.ஆ–24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வாடகை ஒப்பந்த பத்திரத்தில் கீழடி உதவி மின்பொறியாளர் அவர்கள் சரிபார்த்து கையொப்பம் செய்துள்ளார். அந்த ஒப்பந்த பத்திரத்தில் 2 வது பார்ட்டி என்று எழுதப்பட்டுள்ள இடத்தில் இடப்பட்டுள்ள கையொப்பம் எனது மனைவி மீனாட்சிசுந்தரி என்பவரது கையொப்பம் ஆகும். வாடகைக்கு விடப்பட்ட இடத்தில் எனது மனைவிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.376/2B யும் அமைந்திருந்தது. இவ்வழக்கு தொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.10.15 14:49:29 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.